# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



பதிவு அஞ்சல் மூலம்

நகர் ஊரமைப்புத் துறை

(166)

அனுப்புநர்
திருமதி. ர. ராணி, பி.இ.,
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
சேலம் மாவட்டம்.
6, சன்னதி தெரு, சுப்ரமணியநகர்,
சூரமங்கலம், சேலம் – 636 005.
தொலைபேசி எண்: 0427-2448625
Email id: ddslmregion@gmail.com

பெறுநர்
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.),
வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம்,
சேலம் மாவட்டம்

ந.க.எண்.3502/2020/சேமா–1(உ.திகு) நாள்.28.12.2021

ஐயா,

பொருள்: மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – சேலம் மாவட்டம் – சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் – சேலம் மாவட்டம் சேலம் தெற்கு வட்டம் – வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம் – வீரபாண்டி ஊராட்சி/கிராமம் – ச.எண்196/11சி, 196/12, 197/1பி, 199/2, 199/9–ல் 4.35 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. மனுதாரர் திரு. வி.ஆர். பாலசுப்ரமணி அவர்களின் கடிதம் இவ்வலுவலகத்தால் பெறப்பட்ட நாள் 14.12.2020, 27.10.2021, 06.12.2021, 23.12.2021.
2. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 26.12.2020, 01.11.2021, 10.12.2021.
3. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.), வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.92/2021/தி2 நாள் 27.10.2021, 06.12.2021.
4. மேற்பார்வை பொறியாளர், சேலம் மின்பகிர்மான வட்டம், உடையாப்பட்டி அவர்களின் கடிதம் க.எண்.மே.பொ./சே.மி.ப.வ/சேலம்/உ.செ.பொ/சி.கோ.ப.நிலம் எண்.595/2021 நாள் 06.10.2021.
5. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 19799/2020/போ நாள் 24.12.2020.
6. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.04.06.2004.
7. அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020.
8. அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ.4(1)நாள் 09.12.2020.
9. அரசு கடிதம் எண் 19113/நவ4(3)/2017–1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 30.08.2017.

10. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/எல்ஏ1, நாள் 08.09.2017.
11. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019/பிஏ2 நாள் 05.02.2020.
12. அரசு முதன்மை செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அவர்களின் கடிதம் எண்.8449/ந.வ4(3)/2020–2, நாள் 23.09.2020

-------

1. சேலம் மாவட்டம், சேலம் தெற்கு வட்டம், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம், வீரபாண்டி ஊராட்சி/கிராமம், ச.எண்196/11சி, 196/12, 197/1பி, 199/2, 199/9–ல் 4.35 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி கோரி பார்வை 1–ல் சுட்டிய 14.12.2020 நாளிட்ட கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதிக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, பார்வை 2–ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள் 26.12.2020–ல் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் அனுமதி வழங்கப்பட்டது. பார்வை 1–ல் சுட்டிய 27.10.2021 மற்றும் 06.12.2021 நாளிட்ட கடிதங்கள் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சிக்கான தான ஆவணம் எண்.3693/2021 நாள் 30.09.2021, பிழைதிருத்தல் ஆவணம் எண். 4665/2021 நாள் 03.12.2021 மற்றும் TANGECO–க்கான தானபத்திர எண். 3692/2021 நாள் 30.09.2021, பிழைதிருத்தல் ஆவண எண்.4664/2021 நாள் 03.12.2021ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ./சே.மா.(உ.தி.கு)எண்.80/2021** என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)–ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனை</u>

1. (a) பார்வை 8–ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 7–ல் கண்ட TNCDBR-2019 விதி எண் 47 (11)–ன்படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of local body shall be issued to the applicant directly.

(167)

(b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the local body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 9 மற்றும் 10–ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department Dated 22.06.2017 has approved the Tamil Nadu Real Estate (Regulation and Development) Act 2016. The promoter has to advertise market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பார்வை 1–ல் கண்ட 23.12.2021 தேதிய கடிதம் வாயிலாக நன்னிலை வரி கட்டணம், வளர்ச்சிக் கட்டணம், கொடிநாள்நிதி மற்றும் TB Fund ஆகிய கட்டணங்கள் அரசு கணக்கு மற்றும் இவ்வலுவலக வங்கிக் கணக்கில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு நிபந்தனைகள், வரைபடங்கள் மற்றும் தானபத்திரம் மற்றும் பிழைதிருத்தல் ஆவணம் அசல் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.), வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
சேலம் மாவட்டம்.

28/12/21 28/12/2021

**இணைப்பு**

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் (2 தொகுப்பு)

நகல்

| | | |
|---|---|---|
| 1 | திரு. வி.ஆர். பாலசுப்ரமணி,<br>க.எண்.18/62–1,<br>மேட்டுத் தெரு,<br>வீரபாண்டி கிராமம்,<br>சேலம் மாவட்டம். | (கடிதம் மட்டும்) |
| 2 | தொழில்நுட்ப வைப்பறை | (வரைபடம்–1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1) |
| 3 | கோப்பு | (வரைபடம்–1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1) |
| 4 | Tamil Nadu Real Estate Regulatory Authority(TNRERA),<br>No.1A, 1st Floor,<br>Gandhi Irwin Bridge Road,<br>Egmore,Chennai-600008. | (வரைபடம்–1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1) |
| 5 | சார்பதிவாளர்,<br>சேலம் கிழக்கு, வீரபாண்டி<br>சார்பதிவாளர் அலுவலகம்,<br>சேலம் தெற்கு வட்டம்,<br>சேலம் மாவட்டம். | (வரைபடம்–1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1) |
| 6 | உதவி இயக்குநர்,<br>நில அளவை துறை,<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்,<br>சேலம் மாவட்டம். | (வரைபடம்–1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1) |
| 7 | மேற்பார்வை பொறியாளர்,<br>தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம்,<br>உடையாப்பட்டி மின்பகிர்மான உட்கோட்டம்,<br>சேலம் மாவட்டம். | (வரைபடம்–1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1) |

தமிழ்நாடு அரசு

நகர் ஊரமைப்புத் துறை

கோப்பு எண்.3502/2020/சேமா–1(உ.திகு) நாள்.28.12.2021

மனைப்பிரிவு ம.வ./சே.மா.(உ.திகு)எண்.80/2021

## மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019ல் குறிப்பிட்டுள்ள Residential Use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

8. மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய உள்ளாட்சி நிர்வாக அதிகாரியிடமிருந்து ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் நகர் ஊரமைப்பு துறை மற்றும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.

9. அ) மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் இசைவு (Planning Permission/Concurrence)மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ) மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10. மனுதாரர் நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து அனுமதி பெறப்பட்டு, உள்ளாட்சி நிர்வாக அதிகாரியிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புபுல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டமனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம்/விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission/Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission/Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

14. மனைப்பிரிவு அமையும் புல எண்களில் வழக்கு ஏதும் நிலுவையில் இருப்பது பின்னர் அறியப்பட்டால் மனைப்பிரிவுக்கு வழங்கிய ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

<u>அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்</u>

| விபரம் | | பரப்பளவு/விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | – | **4.35 ஏக்கர் (அ) 11610.22 ச.மீ.** |
| கோரிய மனைகள் | – | 73 |
| ஒதுக்கிய மனைகள் | – | 77 |
| மனுதாரர் உபயோகம் | – | – |

<u>பொது ஒதுக்கீடுகள்</u>

<u>மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை</u>

| | | |
|---|---|---|
| 1. பூங்கா பரப்பு | – | **12301.50 ச.அடி (அ) 1143.30 ச.மீ.** (10.12 %) |
| 2. உத்தேச சாலைகள் மற்றும் மூலைமுடுக்குகள் உட்பட | – | **67891.25 ச.அடி. (அ) 6309.60 ச.மீ.** |
| 3. உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட பொது உபயோக மனை பரப்பு | – | **615.00 ச.அடி. (அ) 57.16 ச.மீ.** (0.506 %) |
| 4. TANGEDCO-க்கு ஒதுக்கப்பட்ட பொது உபயோக மனை பரப்பு | – | **625.25 ச.அடி. (அ) 58.11 ச.மீ.** (0.514 %) |
| 5. EWS மனை எண்கள் | – | மனை எண்கள் 24 முதல் 27 வரை,<br>மனை எண்கள் 32 முதல் 33 வரை,<br>மனை எண்கள் 34 முதல் 47 வரை,<br>மனை எண்கள் 48 முதல் 52 வரை |
| 6. EWS மனைகளின் பரப்பு | – | 12546 ச.அடி (10.32%) |

28/12/2021

உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
சேலம் மாவட்டம்.

28/12/21 28/12/2021

வீரபாண்டி வட்டார வளர்ச்சி அலுவலரின் (கி.ஊ) நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர் – திரு.எஸ்.தமிழ்செல்வன், பி.எஸ்.சி., எம்.எல்.,

ந.க.எண்.92/2021/ தி2 நாள். 19.01.2022

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவுகள் – வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம் – வீரபாண்டி ஊராட்சி/கிராமம் – சர்வே எண்கள்.196/11சி, 12, 197/1பி, 199/2,9ல் 4.35 ஏக்கர் (17610.22 ச.மீ) பரப்பளவில் அமையப்பெற்றுள்ள பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதி வரப்பெற்றுள்ளது – வரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை:
1. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020/போ, நாள்.24.12.2020
2. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017–1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 30.08.2017
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/எல்ஏ1, நாள்.08.09.2017.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019/பிஏ2, நாள்.05.02.2020.
5. அரசு முதன்மை செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அவர்களின் கடிதம் எண்.8449/ந.வ4(3)/2020–2, நாள்.23.09.2020
6. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களின் கடித ந.க.எண். 3502/2020/சேமா–1(உ.தி.கு), நாள்.28.12.2021

((()))

ஆணை:–

பார்வை 6–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களின் ஆணையில், சேலம் மாவட்டம், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம், வீரபாண்டி ஊராட்சி, வீரபாண்டி கிராமம், சர்வே எண்.196/11சி, 12, 197/1பி, 199/2,9ல் 4.35 ஏக்கர் (17610.22 ச.மீ) பரப்பளவு இடத்தில் திரு.V.R.பாலசுப்ரமணி, த/பெ.A.ராமசாமி கவுண்டர் (லேட்), என்பவரால் அமைக்கப்பட்டுள்ள, குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, பார்வை (1) முதல் (5) வரையிலான கண்டுள்ள கடிதத்தின்படி, பரிசீலனை செய்யப்பட்டு, குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்திற்கு நிபந்தனைகள் மற்றும் பின்பற்றப்பட வேண்டிய விதிகளின்படி, ம.வ/சே.மா (உதிகு) எண்.80/2021 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 6–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், திரு.V.R.பாலசுப்ரமணி, த/பெ.A.ராமசாமி கவுண்டர் (லேட்),, கதவு.எண்.18/62–1 மேட்டுத்தெரு, வீரபாண்டி கிராமம், சேலம் என்பவரால் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவில் மொத்தம் உள்ள 77 மனைகளுக்கு (மனை எண்.1–77) பார்வை 1 முதல் 5 வரை கண்டுள்ள கடிதத்தின்படி, மொத்தப் பரப்பளவில், பூங்கா, சாலை மற்றும் மூலைமுடுக்கு ஆகியவை மொத்தம் 80807.88 சதுரடிகள் பொதுப்பயன்பாட்டிற்காக, மனுதாரரால், வீரபாண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில், ஆணையாளர், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம் என்ற பெயரில் தானப்பத்திரம் (ஆவண எண். 3693/2021, நாள். 30.09.2021) செய்தும் மற்றும் பிழைத்திருத்த தானப்பத்திரம் (ஆவண எண்.4665/2021, நாள். 03.12.2021) செய்தும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு (TANGEDCO) பொதுப்பயன்பாட்டிற்காக 625.25 சதுரடிகள் மனுதாரரால், வீரபாண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில், மேற்பார்வை பொறியாளர், உடையாப்பட்டி, சேலம் என்ற பெயரில் தானப்பத்திரம் (ஆவண எண்.3692/2021, நாள். 30.09.2021) செய்தும் மற்றும் பிழைத்திருத்த தானப்பத்திரம் (ஆவண எண்.4664/2021, நாள். 03.12.2021) செய்தும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், பார்வை 6ல் காணும் கடிதத்தின் புதிய மனைப்பிரிவின் சிறப்பு நிபந்தனைகளின் படியும் மற்றும் அரசாணை எண்.255, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை நாள்.18.08.1997ன் படியும் ஒரு ஏக்கருக்கு ரூ.1000/– வீதம் மொத்த கட்டணம் ரூ.4500/– வீரபாண்டி ஊராட்சியில் (ஊராட்சி பற்று சீட்டு எண்.12082, நாள். 19.01.2022) மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, சேலம் மாவட்டம், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம், வீரபாண்டி ஊராட்சி, வீரபாண்டி கிராமம், சர்வே எண்.196/11சி, 12, 197/1பி, 199/2,9ல் 4.35 ஏக்கர் (17610.22 ச.மி) பரப்பளவில் திரு.V.R.பாலசுப்ரமணி, த/பெ.A.ராமசாமி கவுண்டர் (லேட்), என்பவரால் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவில் 77 மனைகளுக்கு மட்டும் (மனை எண்கள்.1 முதல் 77 வரை) கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு, அனுமதி வழங்கி இதன்வழி ஆணையிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. நகர் ஊரமைப்பு துறை கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் மனை உரிமையின் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. அதன் மூலம் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினாலோ நீதிமன்ற வழக்குகளுக்குட்பட்டிருந்தாலோ அதனை முடிவு செய்ய நகர் உள்ளாட்சித்துறை பொருத்தமான அமைப்பு அல்ல. அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதேனும் இம்மனையில் சேர்த்து இருந்தால் அம்மனைகள் வரன் முறை தாமாகவே ரத்தாகிவிடும்.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால், இம்மனைக்கு வழங்கப்பட்ட வரன்முறை ஆணை எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.
3. தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.
4. தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனை இடத்தன் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் காட்சிக்கு (Display) வைக்கப்பட வேண்டும்.
5. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தின் மூலம் பெறப்பட்ட கடிததத்தில் வரிசை எண்.1 முதல் 5 வரையுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் வரிசை எண்.1 முதல் 14 வரையிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளில் மனுதாரர் கடைபிடிக்க வேண்[illegible] [illegible]னைகளை கட்டாயம் பின்பற்றிடவேண்டும்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
வீரபாண்டி.

19/01/2022

பெறுநர்
திரு.V.R.பாலசுப்ரமணி,
த/பெ.A.ராமசாமி கவுண்டர் (லேட்),
க.எண்.18/62–1,
மேட்டுத்தெரு,
வீரபாண்டி கிராமம்,
சேலம்.

நகல் : –

1) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம்.
2) சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், வீரபாண்டி.
3) ஊராட்சி மன்றத்தலைவர், வீரபாண்டி ஊராட்சி, வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம்.



# our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate